**முலடியன பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முணைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, முலடியன பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 715,714 தொகையான நீர் பவுசரின் பெறுமதி மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத ஸ்கிட் ஸ்டியர் லோடர் இயந்திரத்தை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையினால் கொள்வனவு செய்திருந்த மற்றும் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிர்மாண வேலைகள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 2,359,346 தொகைக்கான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதி அளவிலும் சபை நிதியத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டிருக்காத 05 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 2,425,400 இற்கான கடன் கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் ரூபா 218,426 தொகை மற்றும் கடன்பட்டோர் ரூபா 63,322 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(உ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,194,404 இற்கான பங்களிப்பு தொகைக்கான கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.

(ஊ) முன்னைய ஆண்டு தொடர்பாக செலுத்தியிருந்த ரூபா 119,122 தொகைக்கான கணக்காய்வு கட்டணம் மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றினை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) வேலைத் திட்டம் ஒன்று இரத்து செய்யப்பட்ட காரணத்தினால் திருப்பி அனுப்பியிருந்த ரூபா 50,000 இற்கான தொகை மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

கூட்டுத்தொகை ரூபா 72,372,910 தொகைக்கான 08 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டிருந்த மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 32,540,848 இற்கான சமமின்மைகள் காணப்படுகின்றன என அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

2013 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா தொங்கல் கணக்கின் ரூபா 36,289 தொகையான செலவு மீதியை இனங்கண்டு தீர்த்திருக்கவில்லை.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 16,135,745 தொகையான நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 684,191 தொகைக்கான மீதிகள் அடங்கியிருந்தன.

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 140,835,769 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்தல் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 இணக்கமின்மைகள்

#### 1.3.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுடன் செலவு விடயங்களில் உள்ளவாறாக செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பாற்றாக்குறை தொடர்பான காரணங்களுடன் காட்டும் கூற்றொன்று சமர்த்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | விதி 199 | பொருட் பதிவேட்டில் அல்லது இருப்பு பதிவேட்டில் அல்லது வேறொறு பதிவேட்டில் அல்லது புத்தகத்தில் பெறுவனவு ஒன்றினை பதிவு செய்யும் போது அனைத்து பதிவுகளுக்கு எதிரே பண்டங்கள் கொள்வனவு தொடர்பாக பண உறுதிச் சீட்டின் இலக்கம் மற்றும் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | விதி 217 மற்றும் 218 | சபைக்கு சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடு ஒன்று மேற்கொள்வதற்கு நடடிவக்கை எடுத்திருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,685,046 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,252,522 ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 281,000 | 22,342 | 15,892 | 76,231 | 721,299 | 25,988 | 109,984 | 69,781 |
| வாடகை | 4,166,200 | 4,547,260 | 4,592,409 | 478,331 | 2,836,957 | 4,734,929 | 4,695,029 | 523,480 |
| அனுமதிப்பத் திர கட்டணம் | 1,131,300 | 1,746,206 | 1,746,206 | 10,450 | 476,520 | 231,371 | 230,371 | 10,450 |
| ஏனைய வரு மானங்கள் | 16,670,500 | 15,716,053 | 13,666,819 | 14,918,074 | 13,852,730 | 9,321,712 | 5,331,192 | 12,868,840 |
| மொத்தம் | 22,249,000 | 22,031,861 | 20,021,326 | 15,483,086 | 17,887,506 | 14,314,000 | 10,366,576 | 13,472,551 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 22,249,000 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 22,031,861 ஆக காணப்பட்டது. ரூபா 13,472,551 தொகையாகக் காணப்பட்ட ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 35,504,412 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 20,021,326 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 15,483,086 ஆக காணப்பட்டது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

#### (அ) ஏக்கர் வரி

ஆரம்ப நிலுவை ரூபா 69,845 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 22,342 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் உடன் ரூபா 92,187 தொகை அறவிடப்படவேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 15,891 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 76,296 தொகைக்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது.

### 2.2.4 வாடகை

ஆரம்ப நிலுவை ரூபா 487,400 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 4,517,850 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 5,005,250 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 4,562,999 ஆகக் காணப்பட்டமையினால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 442,251 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,980,474 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 12,616,481 தொகை ஆகக் காணப்பட்டது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) எதிர்ப்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை (out put)பெற்றுக் கொண்டிருக்காமை

2017 ஆண்டின் போது 48 வேலைத்திட்டங்கள் சபை நிதியத்திலிருந்து பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் நிறைவேற்றுவதற்காக ரூபா 14,400,000 தொகை பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது அவற்றில் மதிப்பீட்டு தொகை ரூபா 600,000 தொகைக்கான 02 வேலைத் திட்டங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. பாதீட்டில் குறிப்பிடப்படாத ரூபா 8,565,405 தொகைக்கான 25 நிர்மாண வேலைகள் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக சம்பளங்கள் மற்றும் படிகள், எரிபொருள் மற்றும் வாகன திருத்த வேலைக்களுக்காக ரூபா 3,937,463 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், குப்பைகள் சேகரிப்பதன் மூலம் ரூபா 51,250 இற்கான வருமானமொன்று உழைத்திருந்தது.

(ii) வருடாந்தம் சேகரிக்கப்படும் 370,800 கிலோ கிராம் குப்பையில் சேதனப் பசளை 4,175 கிலோ கிராம் உற்பத்தி செய்திருந்ததுடன், சேதனப் பசளை உற்பத்தி செய்ய முடியாத 68 சதவீதமான தொகை சபைக்குச் சொந்தமான காணி ஒன்றில் போடப்பட்டிருந்த போதிலும், அந்த காணிக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரழில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

கீழே காணப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவியணித் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பதவிகளில் 05 வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவச் சேவை பணிப்பாளரின் அங்கீகாரத்தை பெற்றிருந்த போதிலும் அப்பதவிகளுக்காக ஆட்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திறைசேரி செயலாளரின் 2014 மார்ச் 31 ஆம் திகதிய 3/2014 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கைக்கு இணங்காமல் சேர்க்கப்பட்டிருந்த ஊழியர் ஒருவருக்கு 2017 ஆண்டின் போது ரூபா 320,500 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

நில அளவை இலக்கம் 6355 மற்றும் 6355 ஏ ஆகிய துண்டுகள் வரைபு அங்கீகரித்து ஏல விற்பனையில் விற்பனை செய்த காணியில் சபைக்குக் கிடைக்க வேண்டிய 01 ரூட் 28.3 பர்சஸ் காணியை சபைக்கு பெற்றிருக்காததுடன் வேறு ஒரு காணி ஏல விற்பனை செய்த போது சபைக்கு கிடைக்க வேண்டிய காணியின் அளவு 01 ரூட் குறைவாகப் பெற்றிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களை ஆவணப்படுத்தாமை**

(அ) பொது வேலைகளுக்காக சபைக்கு கிடைத்திருந்த 2 ரூட் 05 பர்சஸ் அளவிலான தென்னஹேன என்ற காணி ஆவணப்படுத்தியிருக்காததுடன், கூட்டுத்தொகை 24 ஏக்கர்

2.8 ரூட் தொகையான காணிகளின் 07 காணி உறுதிகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) நீள அளவைப் பட இலக்கம் 240/1991 இன் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த தரை வரை படத்தின் மூலம் ஏலவிற்பனை செய்யப்பட்ட காணியில் இருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய 01 ஏக்கர் 2 ரூட் 22 பர்சஸ் காணிகான காணி உறுதிகளை பெற்றிருக்காததுடன், அவற்றை நிலையான சொத்துக்களிலும் உட்படுத்தியிருக்கவில்லை.

### 3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

சபைக்கு சொந்தமான ரூபா 3,075,414 தொகை பெறுமதியான 09 காணிகளின் பாதுகாப்புக்கான வேலிகள் போடப்பட்டு பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்று எடுத்திருக்கவில்லை.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஸ்ரீ லங்கா யூத் விளையாட்டுத் திடல் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 2,403,725 தொகை ஒன்று செலவிடப்பட்டு பகல் இரவு வொலிபோல் விளையாட்டுத் திடல் ஒன்று சபையின் ஆதனம் அல்லாத தெய்யந்தர தேசிய பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், கடந்த 3 வருட காலமாக அது செயற்படாமல் காணப்பட்டது. ரூபா 2,929,419 தொகை ஒப்பந்த வேலை பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இனங்காத முறையில் 02 கட்டங்ளின் கீழ் வேறாக்கப்பட்டு சங்கம் ஒன்றுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. பௌதீக பரிசோதனையின் போது விளையாட்டு திடலின் நேர்த்தியாக்கப்படல் முறையற்றதாக இருந்ததுடன், 02 வேலைகள் முறைசார் விதமாக நிறைவேற்றி இருக்காத போதிலும் ரூபா 360,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 07 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 9,768,140 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 14 சதவீதம் முதல் 100 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) ஒரு செலவு விடயத்தில் ரூபா 519,673 இற்கான பிரதிகூலமான முரண் அவதானிக்கப்பட்டதுடன், அப்பெறுமதி நூற்றிற்கு 26 வீதம் ஆகும்.

(இ) 04 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 8,038,390 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 07 சதவீதம் மற்றும் 92 சதவீதம் ஆகக் காணப்பட்டது.

## 4.2 உள்ளக கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு அகக்க கணக்காய்வு ஒன்ற மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய நிதிப்பிரமாணம் 134 இன் படி உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் கலந்துரையாடி இருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் கணக்காய்விற்கு அனுப்பியிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்தவேலை நிருவாகம்
(உ) கணக்கீடு